எழுத்துக்களம்
வெளியீட்டகம்

# அழியாச் சொப்பனங்கள்



கவிஞர் கவிவளவன்

# அழியாச் சொப்பனங்கள்

கவிஞர் கவிவளவன்

எழுத்துக்களம்

வெளியீட்டகம்,

செம்பாக்கம், சென்னை - 73

# தோற்றுவாய்!

இஃது,

ஒரு கவிஞனின் தனிப்பயணம்,

காலங்கள் தோறும் விளையும் காட்சிகள்;

கருக்கொண்டு உருக்கொள்ளும் கற்பகச்சோலை!

கவிஞன் காலத்தின் கண்ணாடி;

நாளையப் பொழுதுக்காய்,

இன்றே வெளிச்சம் காட்டும் சூரியன்;

பனித்திரையிலும்; வெளிச்சமிடும்,

காலப்பெட்டகம்!

இறைவன் படைத்த இன்னொரு பிரம்மா!

மண்ணில் மானுடம் வாழ,

என்றும் துடிக்கும் ஓர் இதயம்!

மானிடச் சாதியில் தனிப் பறவை!!

# வானம் தொடாத வேர்கள்!

★ பூமியில் விழுந்த,
விதைகளின் விடுதலை;
வேர்களால் விரியும்!

★ ஆதாரமாய்; ஆணிவேராய்;
பரவும் கிளைகளாய்,
மேலும் கீழுமாய்,
காற்றையும் காட்டும்;

★ பூக்களாய்; காய்களாய்;
பொங்கும் கனிகளாய்,
பூகோளப் பரப்பில்,
நர்த்தனமாடும்!



★ ஊர்வன, பறப்பன,
நடப்பவை யாவுமே;
உண்ணும், உறங்கிடும்,
உறைவிடம் தேடும்!

★ மண்ணும் மகிழ்ந்திட,
மழைதரும் மேகம்;
மரங்களால் வாழும்,
வரந்தரும் வனங்களால் வாழும்!

★ ஒன்றோடு ஒன்று,
உராய்ந்து கொண்டு,
காட்டுத்தீயில்,
கானகம் கருகும்!

★ அசையாச் சிறப்பை,
அறமின்றி பேசுவோம்;
மரந்தான் என்றே!

★ வானம் தொடாத,
வாழ்க்கை ஆயினும்,
வேர்களே;
மண்ணையும், விண்ணையும்,
விரும்பிக் கோத்து,
மழையும் தந்து,
மானுடம் முதலாய்,
உயிர்கள் அனைத்தும்,
உய்ந்திடச் செய்யும்!

★ வானம் தொடாத வேர்களே,
மண்ணில் வாழும்;
வாழ்வின் அறனாம்!

(07-01-2018)



## வெற்றிலை!

பூக்கள் இல்லை ;

காய்கள் இல்லை!

பொங்கிவரும் தனிமணமாய்த்,

தரிக்க நறுந்தாம்பூலமாய்;

இதழ் சிவக்கக்,


குதூகலம் கொப்பளிக்கும்!

வெறும் இலையாகிப் போனதால்,

“வெற்றிலையை”


ஒதுக்குவார் உண்டோ?

29.05.2013



# மனம்!

★ கனவுகளைச் சுமக்கும்,
காலத்தின் அளவுகோல்!
சில சமயம்;
கனவுகளைத் தொலைத்துச்,
சுவடுகளைத் தேடும்!



★ ஆடும் குதிரையாம்; இது,
ஆலமர நிழலில்,
ஆறுதல் தேடும்!

★ ஊறும் சிந்தையின்,
உன்னத வடிகால்!
தேறும் சிந்தையின்;
தெளிந்தப் பாய்கால்!

★ கனவே தானும் காலம் சுமக்கும்!
கற்பனை தன்னில்,
கடவுளையும் காணும்!

★ இறைவன் வாழ்ந்திட,
இதயம் சுமக்கும்;
உயிர்மையின் பல்லக்கு!

(22-07-2018)

# குப்பை!

★ வண்ணத்தால் மெருகூட்டிய,
மாட மாளிகைகள்,
வீதிகளுக்கு வியப்பூட்டும்;
வண்ணமிகுத் தோற்றம்!

★ காற்றினில் அசையும் மரங்கள்;
கூட,
கவிதைப் பேசும்!

★ விளக்கொளிகள் கண்ணுக்கு;
விருந்தைச் சமைக்கும்!



★ மனித மனங்களில்,
மகிழ்வின் தேடல்!

★ விருந்து சமைத்த குப்பைகள்;
வீதியோரங்களில்,
அவர்கள் மனத்தைக் காட்டும் !

15-10-2016

# எது இராஜ யோகம்?

★ சூரியன் விழுந்து;
சில நாழிகைக் கடந்து,
வீட்டுக்குப் போக;
வீதியில் நடந்தால்,
சரஞ்சரமாய்,
வண்ணம் உமிழ்ந்த வாகனங்கள்!

★ காட்சிப் பிழைக்க,
கண்ணையும் கூசும்;
கடற்கரைச் சாலையின்,
காட்சி இது!



★ அங்கே,
நடை பாதையில் சிலர்,
நலமாய் உறங்குவர்!
நாளும் தொடரும் காட்சி இது!

★ ஒலியும் ஒளியும்,
அவர்கட்கு ஒத்தடம் இடுமோ!?
அவர்களும் இந்நாட்டு மன்னர்!

★ பணி முடிந்து,
கூடு தேடிப் பதறியோடும்;
எத்துணைப்பேர்?
என்னையும் போல்,
நாள் தோறும்;
இவரைக் காண்பர்?
என்னதான் நினைப்பர்?!

15-10-2016


# மனமே கேள்!

★ நீ..............!
சுடாத நிலவு;
சுட்ட பின்பு சூரியன்;
தேடல்களின் தோழன்
ஆடல்களின் காவலன்;
பாடல்களின் ஞானி!

ஓடிக்கொண்டே இருக்கும்;
ஓர் ஒய்யார மயக்கம்!

★ இளமை வாயிலில்,
எழுதுகோல் வீரன்;
முதுமைக் காலத்தில்,
அமாவாசை நிலவு!

எப்போதும் சிம்மாசனம் தேடும்;
சங்கீதக் கோயில்!



★ அஸ்தமனமில்லா,
ஆனந்தச் சூரியன்!
தன்னைத் தானே ;
உயர்ந்த இடத்தில்,
உட்கார்த்திக் கொள்ளும்;
அகங்காரப் பீடம்!

★ ஆரவாரம் செய்து,
அடுத்தவரையும் கொல்லும்,
ஆனந்த மனமே ;
அமைதி கொள் தினமே!
யாவரும் சமமே!

(30.10.2014)

# தேடுவேன் உலகியல்!

★ இந்த உலகம் இன்றோ, நாளையோ;
உன்னோடு நின்றுவிடப் போவதில்லை!
நேற்று யாருடனோ நிகழ்ந்துக் கொண்டிருந்தது;
நாளை யார் யாருடனோ கைக்குலுக்கப் போகிறது!

★ மாறாதத் தத்துவங்களை,
வாழ்க்கை என்னும் போராட்டத்துள்,
கொண்டிலங்குவது!



★ தேடாத வாழ்க்கையில்,
தெளியாதக் கனவுகளுடன்;
இனம் புரியாதச் சோகமும்,
ஏற்றம் தராத மகிழ்ச்சியும்;
தட்டமாலைச் சுற்றிய தருணங்களாய்,
நகர்த்திக் கொள்ளும் நாளும் பொழுதுமாய்!

★ நீயும் நானும், நிலவும் சூரியனோடு,
ஏனிந்த மண்ணில்?
யாருடையக் கட்டளைக்கு
எங்கிருந்து வந்தோம்?
எவ்விடம் சேர்வோம்?
இறப்பும், பிறப்பும்,
கடனா? கட்டளையா?

★ எதை நோக்கி நம்முடையத் தொடர்ப் பயணம்?
எழுதிய இலக்குகள்,
உண்மையோ! சாத்தியமோ?


எதைக் காண,
இந்தக் கூக்குரலும்; குழப்பமும்?

★ தோற்றமும் மறைவும்,
அழிவும், பிரிவும்,
அழித்தலும் உண்ணலும்,
உயிர்த்தலும் நீங்கலும்,
எதற்காக?
எல்லையில்,
இன்பமோ! துன்பமோ!
தருபவர் யாரோ?
பெறுபவர் யாரோ?

★ இயக்குவது?
அவனோ! அவளோ!
அதுவோ எது அது?

★ தனக்குவமை இல்லாதானோ!
ஒளியுறும் அறிவோ!
அம்பலத் தாடுவோனோ!
அளவிலா விளையாட்டுடையவனோ!

★ பூஜ்ஜியத்தில் நின்று உலகை ஆள்பவனோ!
போதி மரத்தில் ஞானம் தந்தவனோ!
அருக மரநிழல் இருப்பவனோ!



★ ஒளியாய் நிறைந்து உருவின்றி உய்ப்பவனோ!
தந்தையோ! மகனோ!
அறிவின் சுடராய் ஆள்பவனோ!
பாற்கடல் சூழும் பரந்தாமனோ யாரவன்?

★ ஏனிந்தக் கூத்து?
இது மாயனின் கூத்தோ?
மருவிலாக் குழப்பமா?
அல்லது,
கனவாய் நிகழ்த்தும் நிகழ்வோ!

★ அலைகடல் நிகழ்த்தும்,
அலையினில் காண்பேன்!

மனந்தனில் சூழும்,
அமைதியில் காண்பேன்!

தேடலும் ஒருநாள் தெளியும் என்றே,
அறிவின் சுடராய்;
ஆட்டும் இறைமையை,
என்றும் காண்பேன் கண்ணனின் வடிவே!



(03-04-2016)

# எது பக்தி!?

★ பயத்தில் பிறந்ததா பக்தி! – நல்ல,
அறிவின் திறப்போ பக்தி!
மண்ணில் ஆயிரம் புனைக் கதைகள்,
உண்டு, இல்லை!
தேடினோர் தெளிந்தார்;
தெளிவிலார்,
அச்சத்தில் அழற்றும் குழவியாய்!
இல்லை என்பர்; இல்லவே இல்லை என்பர்!

★ உண்டோ! இல்லையோ! யாருக்கு வேண்டும் அது?
உன்னை யாரோ தள்ளிவிட்டுப் போகிறார்கள்;
பின்னொரு நாள் காணாமல் போகப் போகிறாய்!
உன்னை விடுவித்தவரும் இழுக்கப் போகிறவரும் யார்?
விதியா? இயற்கையா?
அதையும் மீறிய வினையோ!



★ யாருடையக் கட்டுப்பாட்டுக்குள் இந்த இயக்கம்?
புரிந்தும் புரியாத நிலையில்,
பூகோளத்தில் எதைத் தேடுவது?
ஏதோ ஒன்று,
உனக்குப் புரியாமல் மறைக்கப் பட்டுள்ளது!

★ அறிவுக்கண்ணைத் திறந்துப் பார்!
ஆற்றலால்,
எந்த ஆளுமையும் இல்லாத,
ஆளுமைக்குள், நீ இருப்பாய்!
அஃது ஒரு புரிதலின் தொடக்கம்!

(09-05-2014)

# புதிதாய் பிறக்கும் !

★ காலார நடந்தேன்;
ஈரப் பனியின் காற்று,
என் காதுகளில் குறுகுறுக்க....!
மேகப் பொதியில் நாணி,
மெல்லக் கதிரே ழுவாள்....!

★ சலசலக்க சிறகசைத்து,
புள்களெல்லாம் பதறியோடும்...!
பனி சுமந்தப் புல்வெளிகள்,
கால்களுக்கு இரவின் கதை சொல்லும்....!

★ மேழி தோள் சுமக்க,
மெல்ல எருதசைய;
உழவரின் தொடர்ப் பயணம்....!



★ நினைவுகளில் சுழல் மெத்தை ;
காலப் பயணத்தில்,
என் கனவுப் பூக்களோடு....!
அந்த மேகம், காற்று, ஞாயிறு;
எனக்காகவே,
புதிது புதிதாய்ப் பிறப்பெடுக்கிறது!

★ காலார நடந்தேன்;
என் காதுகளில்
ஈரக்காற்று காதல் பேச....!

23.03.1996



இந்நூலாசிரியர் இன்றையத் திருவாரூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். நடுவண் அரசில்; சென்னையில், இடைநிலை அதிகாரியாகப் பணிபுரிந்து பணிநிறைவுக் கண்டுள்ளார். அடிப்படையில், கணித மாணவர், முதுநிலைப் பயின்றவர். மேலும், கணினி பயன் பாட்டியல், வணிக மேலாண்மை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில், முதுநிலைப் பட்டத்தோடு, இளநிலை சட்டவியலும் பயின்று தேர்ச்சிப் பெற்றுள்ளார். இவர், கல்வியில் கரையில என்பதாக விளங்குகிறார். எழுத்தும் எனக்கொரு பிள்ளைதான் என்பார் இவர். இவருக்குச், ஜோதிடக் கலையிலும், ஈடுபாடு உண்டு. இதுவும் இவருக்கு ஒரு வல்லமையாக விளங்குகிறது, எழுத்தாற்ற லோடு, பேச்சாற்றலும் கொண்டவர். கவிதையோடு,கதை, கட்டுரை நாடகம் ஆகியவற்றிலும் இவருடைய படைப்புகள் உண்டு.

இவருடைய இசைப்பாடல் தொகுப்பு ஒன்று, "கனவின் ஓசைகள்" எனும் பெயரில் ஒலித்தட்டாக, வெளி வந்துள்ளது. இவர், எளிமையான தோற்றமும், அனைவரிடத்தும், இயல்பாகவும், அன்புடனும்

யாதவக் கண்ணன் போலே,
யான்கண்ட தெய்வம் இல்லை!
மாதவன் போல்வான் ஈசன்,
மரியவள் குழந்தை ஏசு;
சோதரர்ச் சொல்லும் அல்லா;
சொல்லத்தான் வேறு அன்றி,
யாதுமே ஒன்றாம் அந்த,
ஈசனின் வடிவம் தானே!

- **கவிவளவன் (1990)**


**எழுத்துக்களம்** வெளியீட்டகம்
22, ஆர்.பி. அவிண்யூ முதல் தெரு,
**செம்பாக்கம், சென்னை -73**
அலைபேசி: 9940061280
www.ezhuththukkalam.co.in
www.epublish.co.in